12.12.2024
RLT.OP.No.10/2021

ம.சா.1 சாட்சி குருசாமி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரர் சங்கத்திற்கு எந்த ஆண்டு செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்றால் 1994ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டேன். தற்போது வரை நான்தான் செயலாளராக உள்ளேன் என்றால் சரிதான். சங்கத்திற்கு விதிகள் உள்ளதா என்றால் உள்ளது. எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்வாக குழு தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று விதிகளில் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. வேறு யாரும் முன்வராததால் நான் செயலாளராக உள்ளேன். நான் சங்க விதிகளுக்கு மாறாக செயலாளராக இருப்பதாக சொல்வது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

மனு சொத்தில் ஆரம்ப காலத்தில் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் பெட்டி கடை நடத்த வாடகைக்கு வந்தார் என்றால் சரிதான். ஆரம்ப கால மாத வாடகை ரூ.8 ஆக இருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டு ரூ.75 ஆக இருந்தது என்றால் சரிதான். மனு சொத்து சிறிய கடை என்றால் தோராயமாக 120 ச.அடி இருக்கும். 1ம் எதிர்மனுதாரரின் கணவர் உயிருடன் இருக்கும் போது அவரை மனு சொத்தில் இருந்து காலி செய்யவேண்டும் என்று RCOP 14/1995 என்ற மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி மனு 16.11.2000ம் தேதி அன்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக மேற்படி மனு தள்ளுபடி ஆனது என்றால் சரியாக தெரியாது. மேற்படி மனுவை மனு சொத்தில் புதிய கட்டிடம் கட்டுவதற்காக தேவைப்படுவதாக குறிப்பிட்டு மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு

தள்ளுபடி ஆனதற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்திற்கு வாடகையை நீதிமன்றத்தில் செலுத்தவேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரரின் கணவர் RCOP.No.26/2002 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த பதிலுரையில் மேற்படி வழக்கு சம்பந்தமாக சொல்லியுள்ளதை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எந்த காலகட்டத்திலிருந்து வாடகை பாக்கி வைத்துள்ளார் என்றால் ஞாபகம் இல்லை. 1997 ஆகஸ்ட் மாதம் முதல் 2002ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலான மொத்த வாடகையான ரூ.3907/- மற்றும் 2017 வரையிலான வாடகை தொகையை நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள் செலுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட விபரத்தை எனது மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நியாய வாடகையை நிர்ணயம் செய்வதற்காக இதே நீதிமன்றத்தில் RCOP.No.8/2007 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் மாத வாடகை ரூ.1900/- என்று நிர்ணயம் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் RCA.No. 7/2017 என்ற வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மனுவில் மாத வாடகை என்பது ரூ.1600/- நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

1ம் எதிர்மனுதாரரின் கணவர் தன்னை சட்ட விரோதமாக என்னை வெளியேற்ற கூடாது என்று அசல் வழக்கு எண்.360/2006 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கை இதே

நீதிமன்றத்தில் 20.07.2017ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.175/2017 என்ற வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீடானது 05.09.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட வாடகையோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட வாடகையோ 12.09.2024ம் தேதிக்குள் செலுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் கடந்த 09.09.2024ம் தேதி வாடகை தொகையை 2 மணியாடர் மூலமாக அனுப்பினார்கள் என்றால் எனக்கு அனுப்பப்படவில்லை. மேற்படி மணியாடரை நாங்கள் வாங்க மறுத்துவிட்டதால் திருப்பப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு மணியாடர் வரவே இல்லை. மதுரை, S.S.காலனி, ஜவகர் 1 வது தெரு, கதவு எண்.10 என்ற முகவரிக்கு அனுப்பப்படும் கடிதங்கள் எனக்கு கிடைக்கபெறும் என்றால் மேற்படி முகவரியில் 1998ற்கு பிறகு நான் குடியில்லை. வீட்டை மாற்றிவிட்டேன். நான் 2021ம் ஆண்டு தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் நான் குடியில்லாத முகவரியை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். இதற்கு முன்பு நடைபெற்ற அனைத்து வழக்குகளிலும் மேற்படி முகவரியைதான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடந்த வாரம் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலும் மேற்படி முகவரியைதான் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி முகவரியில்தான் தற்போது வரை குடியிருக்கிறேன் என்றாலும் வேண்டுமென்றே மணியாடரை

வாங்க மறுத்துவிட்டு தற்போது அங்கு குடியிருக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மனுவில் சொல்லப்பட்டுள்ள வாடகை பாக்கிக்கான காலத்தை பொறுத்துதான் சார்பு நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார்பு நீதிமன்ற உத்தரவின் படி உரிய காலத்தில் எதிர்மனுதாரர்கள் வாடகை செலுத்த நடவடிக்கை எடுத்து அதனை நான் புறக்கனித்ததால் எதிர்மனுதாரர்கள் வேண்டுமென்றே வாடகை செலுத்த தவறியுள்ளார்கள் என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

என்ன காரணத்திற்காக எதிர்மனுதாரர்களை வெளியேற்ற வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மனு சொத்தானது பழைய கட்டிடமாகும். இடிந்துவிழும் நிலமையில் உள்ளது. அதனால் கட்டிடத்தை புதுப்பிப்பதற்காகவும், வாடகை பாக்கி செலுத்தாததாலும் காலி செய்ய கோரியுள்ளேன். மனு கட்டிடமானது இடித்து விழும் நிலைமையில் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மனு கட்டிடம் இடிந்து விழும் நிலமையில் இல்லை என்றாலும் மனுவிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து எதிர்மனுதாரர்களை வெளியேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 5 ஆவணத்தில் கண்ட விபரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு 2, 3 மற்றும் 5வது எதிர்மனுதாரர்களுக்கும் முறையாக சார்பு செய்யப்படவில்லை என்றால்

சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்பும் சட்டப்படி செல்லாது என்றாலும் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டி ஒன்று என்றாலும் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணையை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தழுவிக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.)